**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 71/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **விஜயா** |
| Husband Name | : | **சகாயராஜ்** |

**தேதி : 24.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

டி.ஆர்.டி. 931 நூத்தப்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க செயலாளர் ரவிச்சந்திரன் என்பவரை 29.07.2016ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **ரவிச்சந்திரன் கொடுத்த வாக்குமூலங்களின் நகல் அ.சா.ஆ. 6 மற்றும் அ.சா.ஆ– 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கே.ஆர். சுப்பிரமணியன் கூட்டுறவு சார் பதிவாளர் / தனி அலுவலர் அவர்களை 13.06.2016 அன்று காலை 11.00மணிக்கு விசாரித்த வாக்குமூலம் பதிவு செய்தேன். **சுப்பிரமணியன் வாக்குமூலத்தின் நகல் அ.சா.ஆ–8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ந.வனராஜன் முதுநிலை ஆய்வாளர் / தனி அலுவலர் மற்றும் செயலாட்சியர் அவர்களை 16.06.2016 அன்று காலை 11.00மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **வனராஜன் என்னிடம் கொடுத்த வாக்குமூலங்களின் நகல் அ.சா.ஆ. 9 மற்றும் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மு. நடராஜன் த/பெ. முத்துகுமாரசாமி, தலைவர் அவர்களை 10.06.2016ம் தேதி காலை 11.30 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **நடராஜன் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தின் நகல் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** செல்லமுத்து த/பெ.முத்து அளவையாளர்

அவர்களை 29.07.2016 ம் தேதி அன்று காலை 11.30 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **செல்லமுத்து வாக்குமூலத்தின் நகல் அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி சங்க செயலாளர் ரவிச்சந்திரன் செயலாளர் கடமை பொறுப்பு நிர்வாக அறிவுரையின்படி சங்கத்தின் நிதி செலவு செய்தல், வங்கியிருந்து பெறுதல், பற்று சீட்டு வசூல் செய்தல், எந்த ஒரு இனத்திலும் அதிக அளவு ரூ.5/–க்கு மேல் மேற்படாமல் சில்லறை செலவுகளை செய்தல், சங்கத்தின் தின பேரேடு மற்றும் பதிவேடுகளை அன்றாடம் எழுதுதல், உபரி கையிருப்பு தொகையை வங்கியில் இருசால் செய்தல் ஆகியவை மேற்படி ரவிச்சந்திரன் பொறுப்புகளாகும். 01.07.1989ம் தேதியிலிருந்து சங்கத்தின் செயலாளராக ரவிச்சந்திரன் செயல்பட்டுவந்தார். நேரமின்மையின் காரணத்தினால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.